1973 ஆகஸ்ட் 13]

மாண்புமிகு திரு. செ. மாதவன் : இது மின்சார பல்பு தொழிற் சாலேயைப் பற்றிய கேள்வி. மின்சார வாரியத்திலே எப்படிப்பட்ட பல்புகளே உபயோகிக்கிருர்கள், யாரிடத்திலே வாங்குகிருர்கள் என்ற விவரம் என்னிடத்திலே இல்லே.

Steel wire manufacturing company

*113 Q.—THIRU S. SANGUMUTHU THEVAR: Will the Hon. the Minister for Industries be pleased to state—

(a) whether any factory for the production of sttel wire has been opened in December 1972; and

(b) if so, the details thereof?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : (அ) & (இ) சென்னேயில் உள்ள திருவாளர்கள் மோடி மானுபாக்சரிங் கம்பெனி ஆண்டு ஒன்றுக்கு 10,000 டன்கள் பல்வேறு வகைப்பட்ட எஃகு கம்பிகளே உற்பத்தி செய்வதற்கு, அம்பத்தூரில் ஒரு தொழிற்சாலேயை நிறுவியிருக்கிருர்கள். அத்தொழிற்சாலே 23—12—1972 அன்று துவக்கிவைக்கப்பட்டது.

திரு. கே. எ. வகாப் : தலேவரவர்களே, தமிழகத்தில் ஆரம்பிக்கப் பட்ட இந்த எஃகு உற்பத்தி தொழிற்சாலேகளுக்கெல்லாம் 'ரா மெட்டீரியல்ஸ்' பற்ருக்குறை இருப்பது அரசுக்குத் தெரியுமா ? ரீ-ரோலிங் மில்ஸ் ஆரம்பித்திருப்பவர்கள் ரா மெட்டீரியல்ஸ் இல்லாமல் சிரமப்படுகிருர்கள். அதற்காக அதிகக் கோட்டாவைப் பெற்றுத்தர அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. மாதவன் : இந்த ஆலேகளுக்குத் தேவை யான மூலப்பொருள்கள் எவ்வளவு கொடுக்க வேண்டுமென்று மத்திய அரசு D.G.&S.D. மூலம் முடிவு செய்கிறது. நம்முடைய மாநிலத்தைப் பொறுத்த வரையிலே இங்கே மாநிலத்திலே தொழிற்சாலேகளிடம் சிபார்சு செய்கிருேம். பத்திலே ஒன்றுதான் கொடுப்பதாகக் கணக்கு.

திரு. கே. என். குமாரசாமி : தலேவரவர்களே, இப்படிப்பட்ட தொழிற்சாலேகளில் எத்தனேத் தொழிலாளர்கள் வேலே செய்கிருர்கள் அதனுடைய உற்பத்தித் திறன் எவ்வளவு என்பதை அரசு சொல்ல முடியுமா ?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : ஆண்டு ஒன்றுக்கு 10,000 டன்.